# சுவிசேஷம்

Transcribed from a message spoken in October 2012, in Chennai

By *R.S.Milton*

### பரவலான சாட்சி

"நான் முன்பு குடிகாரனாக இருந்தேன். ஒருநாள் நான் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டேன். அதன்பின் நான் குடிப்பதை விட்டுவிட்டேன்," என்பதுபோன்ற சாட்சியை நாம் கேள்விப்பட்டிருப் போம். அது நல்லது. இதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம். கிறிஸ்தவ வாழ்க்கை என்றால் என்ன என்பதைப்பற்றி நாம் தெளிவாக இருக்க வேண்டும். "முன்பு நான் தீய காரியங்களைச் செய்தேன். முன்பு நான் பாவ காரியங்களைச் செய்தேன். இப்போது நான் அதைச் செய்வதில்லை," போன்ற காரியங்களைத்தான் எல்லா மதங்களும் சொல்லுகின்றன. "தீய காரியங்கள் செய்யக்கூடாது. நல்ல காரியங்கள் செய்ய வேண்டும்," என்று எல்லா மதங்களும் சொல்லுகின்றன. கிறிஸ்தவம் அல்லது கிறிஸ்தவ மதமும் இதையேதான் சொல்லுமென்றால் இது ஒரு மதம்.

### கிறிஸ்தவம் ஒரு மதமா

ஆரம்பத்தில், நான் கிறிஸ்தவனான புதிதில், ஒருநாள், "நாம் அன்பானவர்களாக இருக்க வேண் டும்," என்ற செய்தியைக் கேட்டேன். அந்த வாரம் முழுவதும் அன்பானவனாக இருக்க முயற்சிசெய் தேன். இன்னொரு வாரம், விசுவாசத்தைப்பற்றி ஒரு செய்தி கேட்பேன். அந்த வாரம் முழுவதும் விசுவாசமுள்ளவனாக இருக்க முயற்சிசெய்தேன். அடுத்த வாரம் தாழ்மையுள்ளவனாக இருக்க வேண்டும் என்பதைப்பற்றிய ஒரு செய்தியைக் கேட்டு, அந்த வாரம் முழுவதும் தாழ்மையுள்ள வனாக இருக்க முயற்சிசெய்தேன். இப்படி கிறிஸ்தவனாக இருக்க வேண்டுமானால் அன்பான வனாக இருக்க வேண்டும், விசுவாசமுள்ளவனாக இருக்க வேண்டும், தாழ்மையுள்ளவனாக இருக்க வேண்டும், பொறுமையுள்ளவனாக இருக்க வேண்டும், தைரியமுள்ளவனாக இருக்க வேண்டும், நீதிமானாக இருக்க வேண்டும் என்று தெரிந்துகொண்டேன். எல்லாவற்றையும் எப்படி ஒரே நேரத்தில் நினைவில் வைத்துக்கொள்ள முடியும்? ஏதாவது ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளுகிறோம். மற்றவையெல்லாம் மறந்துபோகிறதே என்று நான் யோசித்ததுண்டு. இரட்சிக்கப்பட்ட புதிதில் நான் இப்படி யோசித்திருக்கிறேன்: கிறிஸ்தவனாக இருக்க வேண்டுமானால் எவ்வளவோ காரியங்களைப் பின்பற்ற வேண்டியிருக்கிறதே!

கிறிஸ்தவனாக இருக்க வேண்டுமானால் அன்பானவனாக இருக்க வேண்டும், தாழ்மையுள்ளவனாக இருக்க வேண்டும், சாந்தமுள்ளவனாக இருக்க வேண்டும், பொறுமையுள்ளவனாக இருக்க வேண் டும், இரக்கமுள்ளவனாக இருக்க வேண்டும். உண்மை என்னவென்றால் அந்த செய்தியைக் கேட் கும்போது நாம் அப்படி இருக்க வேண்டும் என்று தீர்மானிப்போம். நம்முடைய மனதில் ஓர் உறுதி கூட எடுத்துக்கொள்வோம். சிலர் புதிய வருடத்தில் பிரதிக்ஞை எடுத்துக்கொள்வார்கள். ஆனால், நடைமுறை வாழ்க்கைக்குள் போகும்போது நாம் நம் உறுதிகளையும், பிரதிக்ஞைகளையும் மறந்து விடுவோம். நடைமுறை வாழ்க்கை அல்லது அன்றாட வாழ்க்கையின் போராட்டத்திற்குள் போகும் போது நம்முடைய சுயரூபம் வெளிவரும். நாம் உண்மையிலேயே யாராக இருக்கிறோமோ அது வெளிவரும். அப்போது கிறிஸ்தவ வாழ்க்கை மிகவும் பரிதாபமான வாழ்க்கையாக மாறிவிடுகிறது. ஒரு பக்கம் நாம் மிகவும் உயர்வான ஏக்கங்களை வைத்திருக்கிறோம்.

### சுவிசேஷம் என்றால் என்ன

மத்தேயு 5, 6, 7ஆம் அதிகாரங்களை வாசிக்கும்போது கிறிஸ்தவ வாழ்க்கையின் தரம் மிகவும் உயர்ந்தது. ஆனால், புதிய ஏற்பாட்டில் பவுல், யோவான், பேதுரு ஆகியோர் எழுதியுள்ள நிருபங் களை வாசித்தால் அவை சுவிசேஷம் என்றால் என்ன என்று நமக்குத் தெரிவிக்கின்றன. சுவிசேஷம் என்பது தேவனுடைய இரட்சிப்பு, திட்டம், என்றுகூட சொல்லலாம். "இயேசு கிறிஸ்து உன் பாவங் களை மன்னிக்கிறார். அவர் தம் இரத்தத்தால் உன்னைக் கழுவுகிறார். ஆகையால் நீங்கள் பரலோ கத்திற்குப் போவீர்கள்," என்று சொல்வதுதான் சுவிசேஷம் என்று நாம் நினைக்கக்கூடாது. புதிய ஏற்பாட்டில் பவுல் சுவிசேஷத்தை அப்படிப் பயன்படுத்தவில்லை. "நாங்கள் உங்களுக்குப் பிரசங் கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்," என்று பவுல் கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் கூறுகிறார். சுவிசேஷம் என்பது இயேசுகிறிஸ்து பாவிகளின் பாவங்களை மன்னிக்கிறார் என்பது மட்டும் இல்லை. தேவனுடைய முழுத்திட்டத்திற்கும்

பெயர்தான் சுவிசேஷம். புதிய ஏற்பாடு அப்படித்தான் சொல்லுகிறது. தேவனுடைய நித்தியத் திட்டம் அல்லது தேவனுடைய இரட்சிப்பின் முழுத்திட்டம் இதுதான் சுவிசேஷம்.

## இரட்சிப்பு—ஆரம்ப சுவிசேஷம்

சில சட்டதிட்டங்களைக் கொடுத்து அந்தக் கட்டளைகளின்படி நாம் நடக்க வேண்டும் என்பதல்ல புதிய ஏற்பாடு. பழைய ஏற்பாட்டில் அப்படித்தான் இருந்தது. பத்துக் கட்டளைகள் இருந்தன. அது தவிர பல்வேறு கட்டளைகள் இருந்தன. அதன்பின் அதற்கு பொருள்விளக்கம் கொடுக்கும்போது வேதபாரகர், பரிசேயர்கள் மேலும் ஆயிரக்கணக்கான கட்டளைகள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், சுவிசேஷம் என்பது கட்டளைகளை வைத்துப் பார்ப்பதல்ல. ஏனென்றால், நாம் கட்டளைகளை வைத்து வாழ முடியாது. கட்டளைகளைவைத்து நாம் வாழ முயன்றால் நாம் மீண்டும் மீண்டும் தோற்றுப்போவோம். அது தேவனுடைய வழி அல்ல. தேவனுடைய சுவிசேஷத்தில் அவர் தம் இரத் தத்தால் நம் பாவங்களையெல்லாம் மன்னிக்கிறார். இது சுவிசேஷத்தின் ஆரம்பப் பகுதி. சேற்றில் விழுந்துபோன ஒரு மனிதனை முதலாவது கழுவ வேண்டும். நம் பாவங்களை அவர் கழுவ வேண் டும். நம்மை மன்னித்தபிறகுதான் தேவன் நம்மோடு உறவுகொள்ள முடியும்.

ஒரு நீதிபதியின் மகன் குற்றவாளி என்று வைத்துக்கொள்வோம். குற்றம் செய்ததால் அவன் நீதிமன் றத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறான். முதலாவது, அந்த நாட்டின் சட்டத்தின்படி அவர் அவனைத் தீர்க்க வேண்டும். அதன்பின்தான் மகன் என்ற முறையில் அந்த நீதிபதி அவனோடு உறவு கொள்ள முடியும். எனவே, முதலாவது தேவன் நம் பாவங்களை மன்னிக்க வேண்டும். அதற்காக ஆண்டவ ராகிய இயேசுகிறிஸ்து இந்தப் பூமிக்கு மனிதனாக வந்து, குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தினார். அதனால் நம் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. இது மாபெரும் இரட்சிப்பு. நம் பாவங்கள் மன்னிக் கப்படுவது.

சிலர் பாவ மன்னிப்புக்காகக்கூட அதிகமாகப் போராடுகிறார்கள். ரோமன் கத்தோலிக்கர் பல பொருத் தனைகள், பல ஒறுத்தல்கள், செய்வார்கள். இன்றைக்குக்கூட பாவ மன்னிப்புக்காக பல மதங்களில் மக்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். சில கிறிஸ்தவர்களிடம்கூட, "இயேசு கிறிஸ்து உங்களுடைய எல்லாப் பாவங்களையும் மன்னித்துவிட்டாரா? என்று கேட்டால் ஆடிப் போவார்கள். இன்றைக்குக் காலையில் செய்த பாவத்தை கர்த்தர் மன்னித்துவிட்டாரா? கர்த்தர் நம்முடைய எல்லாப் பாவங்களை யும் மன்னிக்கிறார். அவ்வளவு பெரிய மன்னிப்பு! செய்த பாவம், செய்கிற பாவம், செய்யப்போகிற பாவம், எல்லாவற்றையும் கர்த்தர் மன்னித்து விட்டார். செய்யப்போகிற பாவத்தையும் கர்த்தர் மன் னித்துவிட்டார் என்று சொன்னால் பலருக்கு அதிர்ச்சியாக இருக்கும். "நீங்கள் பாவம் செய்வதை ஊக்குவிப்பதுபோல் இருக்கிறதே!" என்று சிலர் சொல்லக்கூடும். உண்மையிலே சுவிசேஷம் என்றால் என்னவென்றால் தேவன் நம்முடைய எல்லாப் பாவங்களையும் மன்னித்துவிட்டார். ஆனால், இது சுவிசேஷத்தின் ஒரு பகுதி மட்டுமே. மிக முக்கியமான பகுதி என்னவென்று கேட்டால், நம்முடைய பாவங்களை மன்னித்து நம்மைப் பரலோகத்திற்குக் கொண்டு போவதல்ல. கிறிஸ்தவர்களைப் பரலோகத்திற்குக் கொண்டுபோவதல்ல தேவனுடைய தலையாய பாரம் அல்லது நோக்கம்

## சுவிசேஷத்தின் மையக்கரு

தேவனுடைய நோக்கம், திட்டம், குறிக்கோள், என்னவென்றால் அவருடைய குமாரனாகிய ஆண்டவ ராகிய இயேசுகிறிஸ்துவை நம்மூலம் வெளியாக்குவது. இதுதான் சுவிசேஷத்தின் மையக்கருத்து. எனவேதான் நாம் திரும்பத்திரும்ப இதையே கூறுகிறோம். இதைத் தவறவிடும்போதுதான் கிறிஸ் தவம் பலவிதங்களில் கோணல்மாணலாகிவிடும். சுவிசேஷத்தின் மையக் கருத்து அல்லது நோக்கம் என்னவென்றால் கிறிஸ்துவை நம்மூலம் வெளியாக்குவது. தேவன் தம்மை எப்படி வெளியாக்கு கிறார்? முன்பு 10 கட்டளைகள் அல்லது 100 கட்டளைகள். முன்பு கட்டளைகள் மேற்போக்காக இருந் தன. இப்போது கட்டளைகள் நுட்பமாக இருக்கின்றன. இதை வைத்து நாம் கிறிஸ்துவை வாழமுடி யாது.

தேவனுடைய திட்டம் என்னவென்று கேட்டால் கிறிஸ்துவை நமக்குள் வைத்து கிறிஸ்துவை வாழ் வதுதான் தேவனுடைய திட்டம். ஒவ்வொரு உயிரியும் அதினதின் சுபாவத்தின்படி வாழும். தாவரம் தாவர ஜீவனின்படி வாழும். விலங்ககுகள் விலங்கின் ஜீவனின்படி வாழும். மனிதன் மனித ஜீவனின் படி வாழ்கிறான். ஒரு கூண்டைத் திறந்துவிட்டால் ஒரு பறவை தானாகவே பறக்கும். இயல்பாக, எந்தவிதப் புறத்தூண்டுதலுமின்றி தானாகவே பறக்கும். ஒரு மீனைத் தண்ணீரில் போட்டவுடன் அது நீந்த ஆரம்பிக்கும். அது அந்த ஜீவனுடைய சுபாவம். இது சுவிசேஷத்தின் ஒரு முக்கியமான பகுதி.

நம்முடைய ஜீவன் விழுந்துபோன ஜீவனாக இருப்பதால் அதை என்னதான் சரிசெய்தாலும், அதை என்னதான் நாம் ஒழுங்குபண்ணினாலும், அதற்கு நாம் என்னதான் கற்றுக் கொடுத்தாலும் அல்லது படிகளில் முட்டியால் ஏறினாலும் அல்லது முட்செருப்புப்போட்டு நடந்தாலும் அல்லது தீயில் நடந்தாலும் அல்லது காரம், உப்பு, புளி எல்லாம் சேர்க்காமல் வாழ்ந்தாலும் (பெந்தெகொஸ்தே பண்டிதர்களை, போதகர்களை நான் பார்த்திருக்கிறேன்- 'ஐயா, காரம், உப்பு புளி எல்லாம் சேர்க்க மாட்டார். ஏனென்றால், காரம், உப்பு, புளி எல்லாம் சேர்த்தால் மனிதன் பாவம் பண்ணுவான்' என்று சொல்வார்கள்) அது வேலைசெய்யாது. இதுதான் அவர்களுடைய சுவிசேஷம். "மீன், கறி, முட்டை சேர்த்தால் மனிதன் பாவம் செய்வான்," என்பதுதான் அவர்களுடைய சுவிசேஷம். இதைப்பற்றி கொலோசெயர் நன்றாகக் கூறுகிறது: "தொடாதே, தீண்டாதே, ருசிபாராதே." இவையெல்லாம் பார்வைக்குத் தேவபக்திபோலத் தோன்றலாமேதவிர இது தேவனுடைய வழி அல்ல. கிறிஸ்துவை வாழ்வதால் நாம் கட்டுப்பாட்டுடன் இருக்கிறோமேதவிர, கட்டுப்பாட்டுடன் இருப்பதால் நாம் கிறிஸ்துவை வாழ்வதில்லை.

### தேவனுடைய நோக்கம்

தேவனுடைய நோக்கம் என்னவென்றால் ஏதோவொரு வகையில் தேவன் தம் ஜீவனை நமக்குள் வைக்க வேண்டும். அப்போதுதான் நாம் தேவன் வாழ்ந்த வண்ணம் வாழ முடியும். இது மிகவும் எளிமையானது. பல கிறிஸ்தவர்களுக்கு இது ஏன் கடினமாக இருக்கிறது? சின்ன மனதில் நிறைய காரியங்களைப் போட்டு அடைத்துவிட்டோம். எனவே, அது எளிமையான காரியமாக இருந்தாலுங் கூட அதை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கிறிஸ்துவை வாழ வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அதற்கு ஒரேவொரு வழிதான் இருக்கிறது. கிறிஸ்து நமக்குள் ஜீவனாக இருக்க வேண்டும். எந்த ஜீவன் நமக்குள் இருக்கிறதோ அந்த ஜீவனின்படிதான் நாம் வாழ்வோம்.

அப்படியானால், மகா பெரிய சுவிசேஷம் என்னவென்று கேட்டால் ஆண்டவராகிய இயேசு இந்தப் பூமியில் மனிதனாக வந்து, வாழ்ந்து, மரித்து, உயிர்த்தெழுந்ததின் விளைவாக அவர் இரத்தத்தை மட்டும் சிந்தவில்லை. அவர் தம் ஜீவனையும் நமக்குள் வைத்திருக்கிறார். அவர் தம் இரத்தத்தால் நம் பாவங்களை மன்னித்தார். அவர் தம் ஜீவனை நமக்குள் வைத்தார். இதுதான் மறுபடிபிறத்தல். "அவர்கள், இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது, புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல் தேவனாலே பிறந்தவர்கள்." அவர்கள் தேவனாலே பாவம் மன்னிக்கப்பட்டவர்கள் என்று போடவில்லை. ஏனென்றால், அதைவிட மிகப்பெரிய காரியத்தை தேவன் செய்தார். தேவனால் நம்மை பிறக்கச்செய்கிறார். தேவனுடைய ஜீவனை நாம் பெற்றுக்கொள்கிறோம் அல்லது யோவான் 3:6இல் சொல்லப்பட்டுள்ளதுபோல "ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்." யோவான் 3ஆம் அதிகாரத்தில் 'பிறப்பது' என்ற வார்த்தை 5 தடவை குறிப்பிடப்பட்டுள்ளது. எனவேதான், நாம் தேவனை அதிகமாகத் துதிக்கிறோம். "ஆண்டவரே, உம் ஜீவனையே எனக்குத் தந்தீரே." இந்த ஜீவன் ஏதோ ஒரு பொருளல்ல. இந்த ஜீவன் ஒரு நபர். யோவான் 14இல் வாசிப்பதுபோல, அவரே ஜீவன். 1 யோவான் 5இல் வாசிப்பதுபோல, "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்."

### கிறிஸ்துவே ஜீவன்

எனவே ஜீவன் என்பது தேவன் நமக்குக் கொஞ்சம் அன்பு தருகிறார், கொஞ்சம் பொறுமை தருகிறார் என்பதல்ல. சில்லறை வியாபாரம் அல்ல. அன்பு குறைவுபடும்போது அன்பு வாங்கிக்கொள்ளலாம்; தாழ்மை குறைவுபடும்போது தாழ்மை வாங்கிக்கொள்ளலாம்; பொறுமை குறைவுபடும்போது கொஞ்சம் பொறுமை வாங்கிக்கொள்ளலாம்; நாம் கிண்டல் பேசக்கூடிய ஆளாக இருந்தால் நாம் கொஞ்சம் அடக்கம் வாங்கிக்கொள்ளலாம். அப்படியல்ல. தேவன் இப்படிப் பல காரியங்களைத் தருவதில்லை. தேவன் ஒன்றேவொன்றைத்தான் தருகிறார். கிறிஸ்துவை நமக்குத் தருகிறார். அந்த கிறிஸ்து நமக்கு யாராக இருக்கிறார் அல்லது எவ்வாறு இருக்கிறார் என்றால் அவர் நமக்கு ஜீவனாக இருக்கிறார்.

### இயல்பான கிறிஸ்தவ வாழ்க்கை

இன்றைக்கு இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதன்கூட கிறிஸ்து தனக்குள் ஜீவனாக வாழ்வதை உணர முடியும். முன்பு செய்த பல காரியங்களை இப்போது நம்மால் செய்ய முடியாது. இதைச் செய்யக் கூடாது என்று சொல்லுகிற ஒரு கட்டுப்பாடு நமக்குள் இருக்கிறது அல்லது இதைச் செய்ய வேண்டும் என்ற ஓர் உந்துதல் இருக்கும். இது கிறிஸ்துவாகிய ஜீவன். அப்போது கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ஓர் இயல்பான வாழ்க்கையாக இருக்கும். எந்தவிதப் புறத்தூண்டுதலுமின்றி தானாகவே வாழ்கிற ஒரு வாழ்க்கையாக இருக்கும். "இந்த சமயத்தில் நான் அழவேண்டுமா அழக்கூடாதா?

நான் மன்னிக்க வேண்டுமா வேண்டாமா? நீங்கள் சொல்லுங்கள்,” என்று நல்ல எடுத்துக்காட்டுகள் கேட்கிறார்கள். “மன்னிக்க வேண்டும் என்று நீங்கள் சொன்னால் நான் மன்னித்து விடுகிறேன்,” என்று சொல்லுகிறார்கள். இதற்குக் காரணம் என்ன? தேவனுடைய அநேக பிள்ளைகளுக்குள் கிறிஸ்துவின் ஜீவன் இருக்கிறது என்று அவர்களுக்குத் தெரியாது. அவர்களுடைய தலைவர்களும் அதை அவர்களுக்குப் போதிக்கமாட்டார்கள். அதனால், அவர்கள் “சரி, எருசலேமுக்குப் போவோம். தீர்க்கதரிசியிடம் விசாரிப்போம். அவர் என்ன சொல்லுகிறார் பார்ப்போம்,” என்பது இன்று தேவ னுடைய பிள்ளைகளின் பரிதாபமான நிலைமையாகும். நமக்குள் கிறிஸ்து ஜீவனாக இருக்கிறார். அந்த ஜீவனுக்கு உணர்வுகள் இருக்கின்றன. அழ வேண்டுமா அழ வேண்டாமா என்று அந்த ஜீவன் சொல்லும். அந்த ஜீவனுக்கு ஒரு விதி உண்டு. அந்த விதியை நாம் மீறும்போது உணர்வோம். அதை ஆழத்தில் உணர்வோம். திட்டவட்டமாக உணர்வோம். இதில் சந்தேகமேயில்லை. இதை நாம் ஆராய்ச்சிசெய்ய வேண்டாம். “நான் மன்னிக்கலாமா, மன்னிக்கக்கூடாதா? நாம் இப்படிப் பேசலாமா பேசக்கூடாதா?” என்ற ஆராய்ச்சி செய்யவேண்டாம். கிறிஸ்துவின் ஜீவன் நம்மை இயல்பாக நடத் தும். எந்தவிதப் புறத்தூண்டுதலுமின்றி தானாகவே நம்மை நடத்தும். இந்த உணர்வின்படி வாழ்வது தான் கிறிஸ்தவ வாழ்க்கை. இது கனமான வாழ்க்கையோ அல்லது பாரமான வாழ்க்கையோ அல்ல. இது இயல்பான, நேர்த்தியான தானாகவே வாழ்கிற ஒரு வாழ்க்கை. எந்த அளவுக்கு கிறிஸ்து நமக்குள் வாழ்கிறார்?

இன்னொன்று. இன்று நமக்குள் கிறிஸ்து ஜீவனாக இருக்கிறார். உடனே நாம் முற்றுமுடிய கிறிஸ் துவை வாழ்ந்துவிடுவதில்லை. ஒரு மனிதனுடைய ஜீவன் முழு வளர்ச்சியடைவதற்கு 30 வரு டங்கள் ஆகும் என்று சொல்லுகிறார்கள். எனவேதான், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து 30 வருடங்களுக்குப்பிறகு தம் ஊழியத்தை ஆரம்பிக்கிறார். அவருடைய சரீரப்பிரகாரமான வளர்ச்சி, அவருடைய புத்தி வளர்ச்சி, அவருடைய உணர்ச்சியின் வளர்ச்சி, அவருடைய சமுதாய வளர்ச்சி, ஆகியவைகளெல்லாம் வளர 30 வருடம் ஆகிறது. அதுபோல கிறிஸ்துவாகிய ஜீவன் நமக்குள் வளர்வதற்கு நாட்கள் ஆகும். ஆனால், ஒவ்வொரு நாளும் ஒரு வளர்ச்சி நடைபெற்றுக்கொண்டே யிருக்கும். அது வேகமாக நடைபெறுமா அல்லது தடைபடுமா என்பது நம்முடைய அன்றாட வாழ்க்கையின் சூழ்நிலைகளில் கிறிஸ்துவாகிய ஜீவன் நமக்கு உணர்வுகளைத் தருவார். ஆனால், நாம் அதற்கு கீழ்ப்படிய மாட்டோம். நம் இஷ்டப்படி நாம் வாழ ஆசைப்படுகிறோம். உள்ளே வித்தியாசமான உணர்வுகள் இருக்கின்றன என்று நமக்குத் தெரியும். ஆனாலும், நாம் அதற்கு மறுப்புத் தெரிவிப்போம். ‘நான் இப்படித்தான் இருப்பேன்.’ ஏனென்றால், அதில் நமக்கு ஒரு சந்தோஷம். அதன் விளைவாக அந்த ஜீவன் வளர்வது தடைபடும். 10 வருடங்களில் வளர வேண் டிய ஜீவன் இப்போது 30 வருடங்களில் வளர வேண்டியிருக்கும். கிறிஸ்துவாகிய ஜீவன் உள்ளே இருப்பதை அவர்கள் உணரவேயில்லையென்றால் அவர்கள் சாகும்வரை அவர்களுக்குள் எந்த வளர்ச்சியுமே இருக்காது. ஜீவனுக்குப் பதிலாக அவர்கள் நிறைய உபதேசங்களைச் சேர்த்துக்கொள் வார்கள். வேதாகமத்தைப்பற்றி எந்த மாநாடு நடந்தாலும் அதற்குப் போவார்கள். வேதாகமத்தைப் பற்றிய சிறப்புக் கூட்டங்கள் என்றால் அதற்கு முதல் ஆளாக இருப்பார்கள். பரிசுத்த ஆவியான வரின் கொடைகள் அல்லது பரிசுத்த ஆவியானவரின் வல்லமை என்றால் அதைக் கேட்பார்கள். இதன் விளைவாக கிறிஸ்துவாகிய ஜீவன் அவர்களுக்குள் வளர்ந்திருக்கவே மாட்டார்.

## கிறிஸ்துவே சுவிசேஷம்

உடனே இப்படிக் கேட்பார்கள். ஒரேயடியாக ‘ஜீவன்’ ‘ஜீவன்’ என்று பேசிக்கொண்டிருந்தால், சுவி சேஷத்தை அறிவிக்க வேண்டாமா? உண்மையிலேயே கிறிஸ்துவாகிய ஜீவனை நாம் நமக்குள் வாழ அனுமதிக்கும்போது நாம் சந்திக்கிற மக்களைப்பற்றிய ஒரு பாரத்தை, ஓர் எண்ணத்தை, கிறிஸ்து நமக்குள் தருவார். சிலர் இப்படிச் சொல்வார்கள். கிறிஸ்துவையும் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். சுவிசேஷம் அறிவிக்கிறதையும் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்த இரண்டும் வெவ்வேறு காரியங்கள் என்பதுபோல் அவர்கள் பேசுவார்கள். இவை வித்தியாசமானவை அல்ல.

உண்மையாகவே கிறிஸ்துவாகிய ஜீவனை நாம் வாழ்ந்தால், அந்த உணர்வுகளை நாம் உணர்ந்து கொண்டால், நம்முடைய உறவினர்கள், நம்முடன் படிப்பவர்கள் கல்லூரிகளில் பள்ளிகளில் நாம் சந்திக்கிற மனிதர்கள் இவர்களைப்பற்றிய ஒரு பாரத்தை, இவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்ற எண்ணத்தை, கர்த்தர் நிச்சயமாக நமக்குத் தருவார். ஓர் அச்சம் என்னவென்றால் எப்படியாவது எண்ணிக்கையைப் பெருக்கி நம்முடைய இலக்கை எட்டிவிட வேண்டும். இது தவறு.

இன்னொன்று நாம் சுவிசேஷத்தை அறிவித்து புதியவர்கள் இயேசு கிறிஸ்துவுக்குள் வரவில்லை யென்றால் இதுவும் அசாதாரணம். இன்றைக்கு 100 பேர் வந்துவிடுகிறார்கள் என்று வைத்துக்கொள்

வோம். அவர்களை எப்படிப் போஷிப்பது? ஒரு ஆள் போஷிக்க முடியாது. ஆனால் அதிகபட்சம் 12 பேரைத்தான் பராமரிக்க முடியும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவாலேயே 12 பேருக்குமேலே கவனிக்கமுடியவில்லை. அவர் நெருங்கிய உறவுகொண்டு வாழ்ந்தது 12 பேருடன்தான். எந்த அளவுக்கு இப்படி நெருங்கிய உறவு கொண்டு வாழ்கிறோமோ அந்த அளவுக்குத்தான் அங்கு சபை இருக்குமேதவிர, இல்லையென்றால், ஒரு நட்சத்திரத்தைப் பார்க்க வருவதுபோல் மக்கள் கூட்டங்களுக்கு வருவார்கள். அவருடைய நடை, உடை, பாவனை எல்லாமே நட்சத்திரத்தைப்போல்தான் இருக்கும். அவரை நெருங்கவே முடியாது. ஆனால், ஆண்டவராகிய இயேசுவை எளிதில் நெருங்க முடிந்தது. நம் ஒவ்வொருவராலும் எந்த அளவுக்கு சுவிசேஷத்தைத் தெளிவாக அறிவிக்க முடிகிறது. இது முக்கியம். சுவிசேஷத்தைத் தெளிவாக அறிவிப்பதினாலேயே உறவுகள் பலப்பட்டுவிடும் என்று நான் சொல்லவில்லை. முதல்படி நமக்கு சுவிசேஷம் தெளிவாகத் தெரிய வேண்டும். அந்த அளவை நாம் எட்டும்வரை தேவன் நம் எண்ணிக்கையை அதிகரிக்க முடியாது. நாம் ஆயத்தமாகும்வரை தேவன் தம் ஆட்டுக்குட்டிகளை நம் கைகளில் ஒப்புவிக்கமுடியாது. அவர் பொறுமையோடு காத்திருப்பார்.